**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE AT THIRUVOTTIYUR**

| | |
|---|---|
| **OS.No.27/2025** | **PW3** |

27.01.2026 மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய PW3 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது பிரிவின் கீழ் திரு.G.சிவக்குமார், ML., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் பழனி என்பவருடம் இருந்து பிளாட் நெ. 31, 32 ஆகியவற்றை வாங்கினேன். வா.சா.ஆ. 3 தான் அந்த பத்திரம். பழனிக்கு வா.சா.ஆ. 2ன் படி ெஹன்றி சுரேஷ்குமாா் தான் சொத்தை விற்றுள்ளாா். வா.சா.ஆ. 2 ல் சர்வே எண் 694 என்று கண்டுள்ளது என்றால் சாிதான். அதில் நகர் பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் பத்திரத்தை பாா்த்தால் தான் தொியும். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் ச.எண்.993/3 என்று கண்டுள்ளது. அதில் அன்னே வேளாங்கண்ணி நகர் பிளாட் எண். 16,17 என்று கண்டுள்ளது. நான் வாங்கிய சொத்து சுந்தர் காலனி பிளாட் எண். 31, 32 மனைகள். நான் சாட்சி சொல்ல வந்தது சுந்தாா் காலனியில் உள்ள பிளாட் எண்.31, 32 சா்வே எண் 993 சொத்துக்கு தான். வா.சா.ஆ. 3 ல் மனைப்பிரிவு மாற்றப்பட்டதாக உள்ளதா என்றால் எனக்கு தொியவில்லை. எந்த தேதியில் எவ்வாறு மனைப்பிரிவு மாற்றப்பட்டது என்பது எனக்கு தொியாது. நான் வாங்கியதாக சொல்லும் சொத்தும் சா்வே எண், எல்லைகள், விஸ்தீா்ணம் வேறு வேறு என்றால் இல்லை. இல்லாத ஒரு சொத்தை வாங்கிக் கொண்டு சம்பத் என்பவருக்கு தவறான பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சாியல்ல. நான் வாங்கியதாக சொல்லும் சொத்தில் நான் வீடு கட்டவோ குடி இருக்கவோ இல்லை என்றால் சாிதான். எனது சுவாதீனத்தில் இருந்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதால் அதனை அனுசாித்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சாியல்ல.

பத்திரங்களில் சர்வே எண் ஏன் மாறி உள்ளது என்பதற்கு எனக்கு காரணம் தெரியாது. சொத்தை வாங்கும் போது நான் சட்டக் கருத்துரை வாங்கவில்லை என்றால் சரியல்ல.

Typed before me in the open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

Sd/- G. Sivakumar,
Subordinate Judge,
Thiruvottiyur (FAC).